தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 04.11.2026

முன்னிலை

திரு. அபய் குமார் சிங், இ.கா.ப (ஓய்வு)

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். SA 16221 (A) /F/2024

திரு.ரா.மருதமுத்து -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது), -- பொது அதிகார அமைப்பு
சின்னசேலம்,
கள்ளக்குறிச்சி - 606 201.

இறுதி ஆணை

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 13.08.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்(பொ), அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரிநிதியாக திரு.A.பாஸ்கர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் இன்று (04.11.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.S.சையத் காதர், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினையும் மற்றும் "பதிவறையில் தேடிப்பார்த்தும் தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதற்கான ரூ.100/- மதிப்பிலான அரசு முத்திரைத் தாளின் பிரமாணப்பத்திரத்தின் நகல்களையும் (Sworn Affidavit Copy) மற்றும் மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினையும் இணைத்து ஆணையத்தின் முன் நேரில் சமர்ப்பித்தார்.

"அவ்வெழுத்துமூல விளக்கத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரில் கல்வராயன்மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு வனஉரிமைச்சான்று வழங்கும் பணியினை செய்ய அறிவுறுத்தியன் பேரில் அந்த பணிகளின் கவனத்தால் மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல் வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்."

2. இவ்வாணையம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினையும் மற்றும் அரசு முத்திரைத் தாளின் பிரமாணப்பத்திரத்தின் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினையும் ஏற்று இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 16221 (A) /F/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
   உதவியாளர் (பொது),
   சின்னசேலம், கள்ளக்குறிச்சி - 606 201.

2. திரு.S.சையத் காதர்,
   அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்,
   வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
   உதவியாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம்
   (தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

.

மனுதாரர்

திரு.ரா.மருதமுத்து,
எண்.2/239, கிழக்குத் தெரு, குரால்,
பாக்கம்பாடி அஞ்சல்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி - 606 301.
செல் - 70940 52230.

Copy to file: RV/PA